R 5475

# தெய்வீக முரண்பாடுகள் (தெய்வீக முரண்பாடுகள் போல் தோன்றும் மெய்யுரைகள்)

## DIVINE PARADOXES

**"ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை(தயவு) நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும் " – சங்கீதம் 63:3**

இவ்வசனத்தை இரண்டு வழிமுறைகளில் கண்ணோக்கலாம். இரண்டுமே மிகச் சரியானவைகளே. ஒரு வகைமுறை யாதெனில், வெறுமனே சங்கீதக்காரரின் கண்ணோட்டத்திலிருந்தும், அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதையும் கவனமாகக் கருத்தில் கொள்வதாகும். மற்றொரு வகைமுறை, தீர்க்கதரிசனத்தின் நிலைப்பாட்டிலிருந்து அதைக் கவனமாகக் கருத்தில் கொள்வதாகும். தீர்க்கதரிசியான தாவீது, ஜீவனைப்பார்க்கிலும் தேவதயவைப் பெற்றிருப்பது மிகவும் விரும்பத்தக்கது, அதாவது தேவதயவில்லாமல் தான் ஜீவிப்பதைக் காட்டிலும், தான் மரிப்பது நலமென்கிறார் என்று பொருள்படுத்துவதை நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது. அதைத் தீர்க்கதரிசனமாகப் பார்க்கும் மற்ற வகைமுறை யாதெனில், ஏனைய பல இடங்களைப் போலவே, இங்கேயும் சங்கீதக்காரர் , தலையாகிய இயேசுவுக்கும், திருச்சபையாகிய அவரது அங்கத்தினர்களுக்கும் அடையாளமாக இருக்கிறார் என்று அனுமானிப்பதாகும்.

நமது அர்ப்பணிப்பின் பிரதிஷ்டை, மரண பரியந்தமானது. நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அவர் நம்மை அழைத்திருக்கிறார். மேலும் வரவிருக்கின்ற ஜீவனுக்காக மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும் அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவருக்காகவும், அவர் நிலைநிற்கும் நீதியின் கொள்கைகளுக்காகவும் நாம் கொண்டிருக்கும் அன்பின் நிமித்தமாக, நாம் வெறுமனே நம்முடைய ஜீவனைக் கொடுக்க மனதாயிருந்தால் மாத்திரம் போதாது, அவற்றை மகிழ்ச்சியோடு கொடுக்கிறவர்களாயும் இருக்கவேண்டும். தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதில் நம்முடைய மனித ஜீவியங்களை மகிழ்ச்சியோடு கையளிக்கவேண்டும்.

தாவீதின் சங்கீதங்களில் வேறொரு சங்கீதம், ''தேவனுடைய தயவோ நீடிய வாழ்வு'' என்கிற கருத்தை நமக்குத்தருகின்றது(சங்30:5). இந்த முரண் வாக்கியங்களானது, ''தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்'' என்னும் மற்றுமொரு தெய்வீக முரண் வாக்கியத்துடன் இசைந்துவருகின்றன. யாதொருவர் தனது பூமிக்குரிய ஜீவனைச் சரணடையச் செய்கிறாரோ, அவர் கனம் மகிமை அழியாமை மற்றும் திவ்ய சுபாவம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வார். திருச்சபைக்கு வழங்கப்பட்ட தெய்வீக தயவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த மகிமையான விஷயங்களை நாம் மதித்துணருவதில் மகிழ்ச்சியடைகிறோம். மற்றும், நாம் மகிழ்ச்சியுடன் நமது ஜீவன்களைத் தத்தம் செய்கிறோம். சிறந்த பங்கினையே நாம் தெரிந்துகொண்டோம்.

''ஆகையால் என் உதடுகள் உம்மைத் துதிக்கும்'' ''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்'' என்று வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன(ரோமர் 10:10). நீதியாக ஜீவிப்பது தான் கர்த்தருக்கான நம் கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்று என்று நாம் கூறலாம். ஆயினும் கர்த்தருக்குப் பிரியமாக ஜீவிக்க சிலர் கடுமையாக முயற்சி செய்தாலும், அவரை அறிக்கை பண்ணுவதில் கட்டுப்படுத்தப்பட்டோராய் இருக்கக்கூடும். அறிக்கை பண்ணுவதால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களுக்குக் காரணங்கள் இருக்கின்றன. ஒரு காரணம் என்னவென்றால், அந்தகாரத்தினின்று நம்மை வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு, அது உலகிற்கு ஒரு சாட்சியாக இருக்கின்றது. இரண்டாவது காரணம், இந்தச் சாட்சியமானது நம்மீது நல்லதொரு தாக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதாகும். இந்த சாட்சியை ஆதரிக்க நமது சுபாவத்தின் சக்திகளை நாம் உதவியாகப் பெறுகின்றோம். இதனால் நமது சுபாவத்தின் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்கின்றோம்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதென்பது எதிர்ப்பினையே கொண்டுவரும். நம்முடைய கர்த்தர், பிசாசுகளைத் துரத்துவது, வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவது போன்றவற்றை மாத்திரம் செய்துவிட்டு, தெய்வீகத் திட்டத்தைப் பற்றி எதுவும் பேசாமலிருந்திருந்தால், அவர் ஒரு நேர்த்தியான குணாதிசயம் உடையவராக, நன்மை செய்கின்ற ஒரு மனிதனாக மாத்திரம் பார்க்கப்பட்டிருப்பார். ஆனால் அவர் வேதபாரகர் பரிசேயர்கள் போலல்லாமல், வித்தியாசமாகப் பிரசங்கித்ததாலும், அவரது சத்தியப் பிரசங்கம் அவரைச் சுற்றியிருந்தவர்களின் போதனைகளுக்கும் மிஞ்சினதாய் இருந்ததாலும், அது அவர்களின் கோபத்தைத் தூண்டச் செய்தது.

இன்றைக்கும்கூட அவ்வாறே உள்ளது. எல்லா உபத்திரவங்களும் சத்தியத்தை அறியப்படச் செய்வதினாலேயே வருகின்றன. எங்களுக்குத் தெரிந்தவரையில், ஒருகாலத்திலும் இது உண்மையில்லாமல் இருந்ததில்லை. இருண்ட யுகங்களிலும், சுவிசேஷ யுகம் முழுவதிலும், சத்தியத்தைப் பிரசங்கிப்பதினால், அந்தகார லோகாதிபதியினால் சிந்தை இருளடைந்தவர்களிடமிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களுக்கு உபத்திரவங்கள் வந்திருக்கின்றன. நாம் எந்தளவுக்கு உதடுகளைத் திறந்து கர்த்தருடைய சுவிசேஷத்தைக் கூறுகிறோமோ, அந்தளவுக்கு நமக்கு சாத்தானிடமிருந்தும், அவனால் குருடாக்கப்பட்டவர்–களிடமிருந்தும் எதிர்ப்புகள் வரும். ஒருவர் உதடுகளினாலே தேவனைத் துதிக்கவும் செய்யலாம், அவ்வுதடுகளைக் கொண்டே மனிதர்களைக் காயப்படுத்தவும் செய்யலாம். தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட வகுப்பாரின் உதடுகளானது – அவருடைய ஊழியத்திற்கென்று தற்போதைய ஜீவியத்தை அர்ப்பணித்தவர்களின் உதடுகளானது – அவரைத் துதிப்பதற்காக அர்ப்பணிக்கப்படவேண்டும். நம்முடைய தேவனுடைய மகிமையான குணத்தையும் பரிவிரக்கத்தையும் வெளிப்படுத்துவதற்காகவும், நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிற தெய்வீகத்திட்டத்தின் அதிசயங்களை வெளிப்படுத்துவதற்காகவும் அர்ப்பணிக்கப்படவேண்டும்.

––––––––––